# வள்ளுவர் கூறும் பொருளாதார வாழ்க்கை

**கோ. யோகலெட்சுமி**
**முதுகலை இரண்டாம் ஆண்டு**
**தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி 2**
Yogalakshmi0122@gmail.com

**10**

**ஆய்வு சுருக்கம்**

மனித வாழ்வோட்டத்தில் "பொருள்" இன்றியமையாததும் தவிர்க்க முடியாததுமான ஒன்றாகும். வாழ்க்கையைப் பொருளுள்ளாதாக மாற்றுவது பொருளே ஆகும் . ஒவ்வொரு தனி மனிதனையும் வலுப்படுத்தி மனதில் வலுவாக நம்பிக்கை கொள்ள வைப்பது பொருள் ஆகும். திருக்குறள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளன. குறிப்பாக மனிதன் பொருளீட்டி எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது . திருக்குறளில் பொருளின் தன்மையும் பொருளீட்டும் முறைகளும் அவற்றைத் திட்டமிட்டுச் செலவு செய்யும் முறைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் பொருளியல் கருத்துக்கள் பரவிக் கிடக்கின்றது. பொருளீட்டல் தொடர்பான முன்னையோர்கள் சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு இன்றியமையாதவை இன்றைய சமுதாயம் பொருளினாலும் பொருளீட்டல் முறைகளினாலும் மனிதநேயம் இழுந்த நிலையில் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டே மக்கள் கூட்டத்தை கொண்டிருக்கின்றது . பொருள் மனிதனுக்கு தேவையான ஒன்றே இருப்பினும் அதனை ஈட்டுவதற்கும் பிரயோகிப்பதற்கும் நியமங்கள் உள்ளன. அத்தகைய நியமங்களை இன்றைய சமூதாயத்திற்கு எடுத்துக் கூறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளது . திருக்குறள் காட்டிய வழியில் பொருளை ஈட்டி , அதனைப் பாதுகாத்து, வரவறித்து செலவு செய்து, நாட்டையும் வீட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல குறளின் பொருளியல் சிந்தனை எக்காலத்தில் பொருந்தும்

என்பதை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கலைச்சொற்கள்**

அந்தஸ்து – செல்வாக்கு கௌரவம் – பெருந்தன்மை, மரியாதை தராசு - துலாக்கோல் திரவியம் – செல்வம் , பொன் நியமம் - யோகம் பிரயோகம் – உவமானம்

**முன்னுரை**

“**திரைகடல் ஓடி திரவியம் தேடு** ” என்பது அவ்வை வாக்கு . இத்தகைய பழமொழிகள் ஒவ்வொன்றும் பழமையான மொழிகள் மட்டுமன்று அதை ஒவ்வொன்றும் அனுபவ மொழிகள் வாழ்க்கை அனுபவங்கள் ஆனது , அனுபவங்கள் தான் வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றன. பொருள் நிறைந்ததாக மாற்றுகின்றன.

**வாழ்வதற்கு பொருள் வேண்டும் நாம்,**
**வாழ்விலும் பொருள் வேண்டும்.**

பொருள் பற்றி திருவள்ளுவர் மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று பொருள் ஈட்டுதல் . பொருள் இல்லாமல் எந்த நன்மையையும் அடைதல் முடியாது . புற வாழ்க்கைக்கு அது இன்றியமையாதது . மற்றும் தீய வழிகளில் பொருள் ஈட்டாமல் அதை முறையாகத் திறனறிந்து பொருள் ஈட்டுதலே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது என்று வற்புறுத்துகிறார். வள்ளுவர்,

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**(247) குறள்

அருள் இல்லாதவர்க்கு மேல் உலகில் மட்டும் தான் இடம் இல்லை. ஆனால் பொருள் இல்லாதவர்க்கு தான் வாழ்கின்ற உலகில் இடம் இல்லை என்று பொருட் செல்வத்தின் பயனைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**திருக்குறளில் பொருளியல்**

திருவள்ளுவர் பொருளின் தன்மை பொருளீட்டும் முறை , பொருளை செலவு செய்யும் முறை, அனைத்து தரப்பினருக்கும் பொருளின் அவசியம் , பொருளின் பயன் என்பன தொடர்பாக கூறியுள்ளார் . திருவள்ளுவரின் பொருளியல் தொடர்பான சிந்தனைகள் மேற்கத்தைய பொருளியற் வரலாறுக்கு சிந்தனையாளர்களுடன் ஒன்றிச் செல்கின்றதையும் அவதானிக்கக முடிகின்றது. வள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள்

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற பண்டைய கிரேக்க சிந்தனையாளர்களின் கருத்துகளோடும், ஆதம் ஸ்மித் போன்ற நவீன காலப் பொருளாதார அறிஞர்களின் ஒப்பிட்டு நோக்க கூடியது.

**பொருளின் இயல்பு**

பொருள் மனிதனுக்கு மதிப்பைத் தருகின்றது . சமுதாயத்தில் பொருள் படைத்த மனிதர்களையே மதிக்கின்றனர் . பொருள் இல்லாதவர்களை யாரும் மதிப்பதில்லை . பொருள் சேர்த்தாரை உயர்வடையச் செய்கின்றது . ஒன்றுமே இல்லாத மனிதர்களையும் பொருட்டாக மதிக்கின்ற அளவிற்கு உயர்த்தும் தன்மை கொண்டதாக விளங்குகின்றது.

**பொருளல் லவரைப் பொருளாகப் செய்யும்**

**பொருளல்லது இல்லை பொருள்** (751) குறள்

என்று திருக்குறள் குறிப்பிடுகிறது . பொருள் இருப்பவனையே இவ்வுலகம் மதிக்கும் . பொருள் வளம் இல்லாதவனை , அவன் நல்ல பண்பு உள்ளவனாக இருந்தாலும் அவனை அனைவரும் இழிவாக நடத்துவர் . அதனால் பொருளின் அருமை அறிந்து அனைவரும் நல்வழியில் பொருளீட்ட வேண்டும் என்பதை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**இல்லாரை எல்லாரும் வள்ளுவர் செல்வனை**

**எல்லாரும் செய்வர் சிறப்பு** (752) குறள்

மனிதனை சமுதாயத்தில் அந்தஸ்த்தும் , கௌரவமும் உள்ள ஒருவனாக மாற்றும் ஒன்றே பொருள் என பொருளின் இயல்பினை வரையறுக்கின்றார் வள்ளுவர்.

**பொருளீட்டு முறை**

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றி வந்த பொருள்** (754) குறள்

என்ற குறள் நமக்கு எடுத்துரைக்கின்றது. நேர்வழியில் வந்த பொருளானது அன்பினையும், அறத்தினையும் வளர்கின்றது . தீய வழியில் சேர்க்கப்பட்ட பொருள் அன்பினையும், அறத்தினையும் இழக்கச் செய்கின்றது . பிறரின் அழிவிலும் ! அழுகையிலும் பெற்ற பொருளை வெறுத்தொதுக்குதல் வேண்டும் . அதுவே பொருளீட்டு முறையில் தலை சிறந்தது.

**பொருளைச் செலவு செய்யும் முறை**

பொருளைத் தேடுவதைப் போன்றே அதனைச் செலவு செய்வதிலும் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும் . மனம் போன போக்கில் பொருளைச் செலவு செய்தால் அதனால் செல்வம் தேய்ந்து வறுமையுற நேரிடும் தன்னுடைய வருவாயை அறிந்து அரசனோ , குடிமக்களோ செலவு செய்தல் வேண்டும் . வரவுக்கு மீறி செலவு செய்தால் நாடும் வீடும் அழிவைச் சந்திக்க நேரிடும் . அதனால் வரவறிந்து செலவு செய்து வாழ்க்கையை நடத்துதல் வேண்டும்.

**ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை** (478) குறள்

பொருள் வரும் வழி சிறியதாக இருந்தாலும் செலவு செய்யும் வழி அகலமாக இருத்தல் கூடாது. செலவினை அதிகம் செய்தல் கூடாது . அவ்வாறு இருந்தால் வாழ்வில் எந்தவிதமான துன்பமும் வராது . வருவாய்க்குள் செலவு இருத்தல் வேண்டும் அது அனைத்து வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும் என்று இத்திருக்குறள் நமக்குப் பொருளைச் செலவு செய்யும் முறையினை தெளிவுறுத்துகின்றது. இது எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் எம்மக்களுக்கும் பொருந்தும் நெறியாகும் என்பது நோக்கத்தக்கது.

நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டை ஆள்வோர் திட்டமிட்டுப் பொருளீட்டிச் செலவு செய்தல் வேண்டும் . பொருள் வருவாய் வழி அறிந்து அப்பொருளை ஈட்டுவதற்கு உரிய திட்டத்தின் வகுத்தலும் பின்னர் திட்டத்தின் படி பொருளை ஈட்டுவதும் , ஈட்டிய பொருளைப் பெருக்கி வளர்த்தலும் அதனைக் காத்தலும் ஆகிய பல்வேறு திறமைகளை உடையவனாக அரசன் இருக்க வேண்டும் . அவ்வாறு இருக்கும் அரசனால் நாடும் மக்களும் அளப்பறிய பயன்பெறுவர்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு** (385) குறள்

**அளவறிதல்**

முயன்று பொருள் தேட வேண்டும் . முறையாகத் தேட வேண்டும் . அவ்வாறு தேடப்பட்ட பொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படவும் வேண்டும் . சிக்கனம் இழந்த குடும்பம் பொருளாதாரத்தால் நலிவடையும் நாடு தன் வலுவிழக்கும் உலகத்தால் இழிவாகப் பேசப்படும் நிலையும் வரும்.

**ஆற்றின் அளவறிந்து ஈக அது பொருள்**
**போற்றி வழங்கும் நெறி** (477) குறள்

கொடுப்பவர், பெறுபவர் இருவருடைய தன்மையையும் கருத்தில் கொண்டு பொருள் வழங்குதல் வேண்டும் . **"ஆற்றில் இட்டாலும் அளவோடு இடு"** என்பது பழமொழி . அவ்வாறு கடைப்பிடிக்காதவன் வாழ்க்கை இருப்பது போல் இருந்து இல்லாமல் விரைவில் போய்விடும்.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்** (479) குறள்

**பொருளியல் மேலாண்மை**

பொருளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் . பொருளைப் பேணி அதனைப் பெருக்குதல் வேண்டும். அது பொருள் நிலைக்கும் வழியாகும் அவ்வாறு வருவதையும் செலவு செய்வதையும் மேலாண்மை செய்யாது விட்டு விட்டால் பொருள் நமக்குரியதாக இருக்காது. இத்தகைய பொருளியல் மேலாண்மை கூறுகின்றன.

**பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி**
**ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு** (252) குறள்

செல்வத்தின் சிறப்பும் தேவையும்

திருவள்ளுவர் கண்ட அரசியல் பொருள் இன்றியமையாதது . அரசனுடைய பெரும் பணியும் தலையான பணியும் நாடு காவல் . நாடு காவலுக்குப் படையும் அரணும் தேவை . இவற்றுக்கு ஏராளமான செல்வம் வேண்டும் . அரசன் "கொடை அளி செங்கோல் " உடையவனாகிக் "குடிதழீஇக் கோலோச்ச" வேண்டும். இதற்கு பொருள் தேவை. நாட்டில் "வாரி பெருக்கி வளம் படுக்க " வேண்டும். இதற்கு பொருள் தேவை . அரசன் அரண்மனை வாழ்க்கைக்கும் இன்ப வாழ்வுக்கும் பெரும் பொருள் செலவிட்டுக் கொள்ளுகிறான் . இச்செலவினங்களால் அரசனுக்கு வருவாய் , வருகை தந்து கொண்டிருக்க வேண்டும் . ஆகவே தான் வள்ளுவர் அரசை வகுத்துரைக்கும் தோற்றுவாயில்

**படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு**

**பொருளின் பயன்**

நான் தேடிய செல்வத்தைப் பிறருக்கு ஈத்துவக்க வேண்டும். ஈத்துவக்கும் இன்பமே வாழ்வின் பெரும் பேரின்பம் ஆகும் என்கிறார் வள்ளுவர். அறவழியில் தேடிச் சேர்த்த பொருள், அனைவருக்கும் பரவலாக்கப்பட வேண்டும். பொருள் ஓரிடத்தில் குவிவதால் மட்டும் பலன் ஏற்படுவதில்லை. தாராளமயமாக்கல், உலகமயமாக்குதல் எனப் பொருளை அனைவரிடத்திலும் சென்று சேரும் வகையில் பரவலாக்க வேண்டும். முறையாக நாம் சேர்த்து வைத்த பொருள் யாவும் நம்மைச் சார்ந்தவர்க்கும் நம்மை சார்ந்த சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

**தரளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு** (212) குறள்

**தொகுப்புரை**

ஒரு நாட்டின் ஏழ்மை நிலையை எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி விளக்கமாகப் பொருட்பாலில் வள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார். ஒரு நாடு முன்னேற அந்நாட்டின் பொருளாதாரம் முதலில் ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். மக்களைத் துன்பம் இன்றிக் காக்கும் அரசுக்கும் அந்த அரசுக்குத் துன்பம் ஏற்பட்டால் தோள் கொடுக்க வேண்டிய மக்களுக்கும் ஒரு சேர இலக்கணம் கண்ட நூல் திருக்குறள் ஒன்றாகத்தான் இருக்க முடியும்!

வாழ்க்கை பொருளால் ஆனது, பொருள் நிறைந்தது. மனித இனக்குழு சமூகமாக வாழ்ந்த போது தன்னிடம் உள்ள பொருளை கொடுத்துவிட்டு, தனக்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொண்டான். அந்த பொருளை ஈட்டுவதற்கு மனிதன் திரைக்கடல் ஓடி இருக்கின்றான். இக்கட்டுரையின் வாயிலாக ‘மனிதன் வாழ்வதற்கு பொருள் வேண்டும்’, ‘வாழ்வதிலும் பொருள் வேண்டும்’, ‘அதற்கு அரசின் உறுதணை அவசியம் வேண்டும்’ என்ற சொந்நாபோதகரின் பொருளியல் சிந்தனைகளை உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**

திருக்குறள் கட்டுரைகள். – கி .ஆ . பெ. விசுவநாதன்
முதல் பதிப்பு நவம்பர் 1958, சென்னை

வள்ளுவர் வகுத்த பொருளியல் - தி . முருகரத்தனம் , மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை 625021
முதல் பதிப்பு 1975

செந்தமிழ் (திங்கள் இதழ்) - இரா. சதாசிவம்
(திருவள்ளுவர் ஆண்டு 2025) மதுரைத் தமிழ்ச் சங்கம்
தோற்றம் 1903, மதுரை